# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1951/1 - 2016 ජනවාරි 25 වැනි සඳුදා - 2016.01.25

*1951/1 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 3/2009.*

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்**

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
இலங்கைப் பொதுப்
பயன்பாடுகள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2016, சனவரி 25.*

**விதிகள்**

1. (1) இவ்விதிகள் மின்சார (பிணக்குகள் தீர்த்தல் பற்றிய நடைமுறை) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) 2011.05.25 ஆந் திகதிய 1707/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மின்சார (பிணக்குகள் தீர்த்தல் பற்றிய நடைமுறை) விதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

(3) ஐயத்தை தவிர்த்துக் கொள்வதற்காக சொல்லப்பட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகளின் கீழ் தொடங்கப்பட்டு மற்றும் இன்னும் முடிவுறாதவையான மத்தியஸ்தம், நடுத்தீர்ப்பு மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் என்பன இயைபான நடவடிக்கை முறையின் கீழ் அவை முடிவடையும் வரை அந்நடவடிக்கைகள் நடைமுறையில் இருத்தல் வேண்டும்.



**கவனிக்க.-** *1950/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல. 1950/52 ஆகும்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. இவ்விதிகள் -

(1) பின்வரும் வகுதிகளுக்கிடையில் எழுகின்ற பிணக்குகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாக கீழேயுள்ள பாகம் I இல் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(அ) சட்டத்தின் அட்டவணை I, II அல்லது III ஆகியவற்றின் அல்லது 25- 30 வரையான பிரிவுகளின் கீழ் உரிமம் பெற்றவருக்கும் மற்றும் கட்டணம் செலுத்தும் ஒரு வாடிக்கையாளருக்கும் இடையில் எழும் பிணக்குகள் ;

(ஆ) மேலேயுள்ள பந்தி (அ) இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவை தவிர்ந்த பிணக்குகளும் மற்றும் உரிமம் பெற்றவருக்கும் கட்டணம் செலுத்தும் ஒரு வாடிக்கையாளருக்கும் இடையில் எழுகின்ற பிணக்குகள் ;

(இ) உரிமம் பெற்றவருக்கும் பாதிக்கப்பட்ட ஏனைய திறத்தவருக்கும் இடையில் எழுகின்ற பிணக்குகள் ; அத்துடன்

(ஈ) உரிமம் பெற்றவருக்கும் வேறொரு உரிமம் பெற்றவருக்கும் இடையில் எழுகின்ற பிணக்குகள்.

(2) பாகம் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட பிணக்கொன்றுக்கான திறத்தவர்கள் தீர்வொன்றுக்கு வரத் தவறுகின்ற ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பிணக்குகளைத் தீர்ப்பதில் கீழேயுள்ள பாகம் II இல் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறையானது பின்பற்றப்படுதல் வேண்டும்.

## பாகம் I

A. விதி 2 (1) (அ), (ஆ) மற்றும் (இ) என்பவற்றின் கீழ் வரும் பிணக்குகளைத் தீர்த்தல்.

3. உரிமம் பெற்றவரொருவருடன் விதி 2 (1) (அ), (ஆ) அல்லது (இ) இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பிணக்கொன்றை உடையவரும் அத்தகைய பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கு விரும்புகின்றவருமான கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளர் அல்லது வேறெவரேனும் பாதிக்கப்பட்ட திறத்தவர், அந்நோக்கத்துக்காக, (இதனகத்துப்பின்னர் "பிணக்குத் தீர்க்கும் அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை மின்சாரச் சபையின் (CEB) முறையான விநியோக, கடத்துகை அல்லது மின்பிறப்பாக்க உரிமம்பெற்றவரின் பிரதிப் பொது முகாமையாளருக்கு அல்லது இலங்கை மின்சாரக் கம்பெனி (பிறைவேட்) லிமிட்டெட்டின் (LECO) தொழிற்பாட்டுத் தலைவருக்கு, பிணக்கிலுள்ள கருமத்தையும் அதற்கு இயைபானதென அத்தகைய கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளர் அல்லது வேறெவரேனும் பாதிக்கப்பட்ட திறத்தவர் கருதுகின்ற வேறெவையேனும் நிகழ்வுகளையும் எடுத்துக்கூறி, அதனைத் தீர்த்துவைப்பதற்கானவொரு முன்மொழிவு உள்ளடங்கலாக, பொருளளவில் இவ்விதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் அ இல் எழுத்திலான வேண்டுகோளொன்றை அனுப்பலாம்.

4. விதி 3 இல் குறிப்பீடு செய்யப்பட்ட வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து பத்து (10) வேலை நாட்களுக்குள் பிணக்குத் தீர்க்கும் அலுவலர் பிணக்கிலுள்ள இரண்டு திறத்தவர்களுக்குமிடையில் பின்வருமாறு கூட்டமொன்றினை ஏற்பாடு செய்தல் வேண்டும்:-

(i) கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளர் அல்லது பாதிக்கப்பட்ட ஏனைய திறத்தவர் ; அத்துடன்

(ii) பிணக்கிலுள்ள கருமத்திற்கு பொறுப்பான அலுவலர் (இதனத்துப்பின்னர் "இயைபான அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்).

அத்துடன் கூட்டமொன்றின் மீது இரண்டு திறத்தவர்களும் பிணக்குத் தீர்க்கும் அலுவலரின் உதவியுடன் பரஸ்பர ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வினை எய்துவதன் மூலம் பிணக்கினை தீர்ப்பதற்கு அவர்களுடைய சிறந்த முயற்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

5. பிணக்கிற்கான திறத்தவர்கள் ஒரு தீர்வை எட்டக்கூடியதாக இருந்தால், அத்தகைய தீர்வு பொருளளவில் இவ்விதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள ஆ என்னும் படிவத்தில் எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய தீர்வின் எண்பிப்பிற்காக இரண்டு திறத்தர்களினாலும் மற்றும் பிணக்குத் தீர்க்கும் அலுவலரினாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

6. விதி 4 இல் குறித்துரைக்கப்பட்ட பத்து (10) வேலை நாட்களுக்குள் இரண்டு திறத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை எட்டுவதற்குத் தவறுகின்றவிடத்து, பிணக்கிற்குரிய திறத்தவர்கள் பொருளளவில் இவ்விதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள இ என்ற படிவத்தில் உள்ள ஆவணமொன்றில் அப்பயன்படக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், பிணக்குத் தீர்க்கும் அலுவலலரினால் புறக்குறிப்பிடப்படுதலும் வேண்டும்.

*ஆ. விதி 2 (1) (ஈ) இன் கீழ் வரும் பிணக்குகளைத் தீர்த்தல் :-*

*7. 2 (1) (ஈ) என்னும் விதியின் கீழ்க் குறித்துரைக்கின்றதான வேறொரு உரிமம் பெற்றவருடன் பிணக்கொன்றினைக் கொண்டுள்ளவரும் மற்றும் அதனைத் தீர்ப்பதற்கு விரும்புகின்றவருமான உரிமம் பெற்றவரொருவர், மற்றைய உரிமம் பெற்றவருக்கு அதனைத் தீர்ப்பதற்கான முன்மொழிவொன்றினை உள்ளடக்கி, குறித்த திறத்தவர் இதற்கு பொருத்தம் எனக் கருதும் பிணக்கு விடயத்தையும், ஏதேனும் வேறு விடயங்களையும் குறிப்பிட்டும், பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள அ என்ற படிவத்திலான எழுத்திலான ஒரு வேண்டுகோளை உரிமம் பெற்ற மற்றைய தரப்புக்கு அனுப்பி வைக்கலாம். மேலும் அந்த உரிமம்பெற்றவர் மூன்று ஆட்களின் பெயர்களையும் அவர்களுடன் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களையும் உள்ளடக்கி அறிவிக்கும் அதேவேளை, அவர்களில் இரண்டு தரப்புகளினதும் விருப்பத்தின் பேரில் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவர், அந்தப் பிணக்கைத் தீர்ப்பதற்கான தமது முயற்சியில் உதவுவதற்கு ஒரு மதிப்பீட்டாளராக இருத்தலும் வேண்டும்.*

*8. மற்றைய திறத்தவரால் முற்போந்த விதி 7 இல் குறித்துரைக்கப்பட்ட சொல்லப்பட்ட எழுத்திலான வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஐந்து (5) வேலை நாட்கள் கொண்ட காலப்பகுதியினுள், உரிமம் பெற்றவர்கள் தமது மதிப்பீட்டாளருடன் அனைத்துத் திறத்தவர்களுக்கும் வசதியான ஒரு இடத்தில் கூடுதல் வேண்டும். அக்கூட்டத்தில், பிணக்கிற்கான திறத்தவர்கள் மதிப்பீட்டாளருக்கு அவர்களுடைய பிணக்கினை சமர்பித்தல் வேண்டும்.*

*9. மதிப்பீட்டாளரின் உதவியுடன் திறத்தவர்கள் தீர்வொன்றினை எட்டுவதற்கான ஒவ்வொரு முயற்சியினையும் செய்தல் வேண்டும். மதிப்பீட்டாளருடைய அபிப்பிராயமானது பிணிப்பதாகவிருத்தலாகாது. ஆனால் ஒரு தீர்வை எட்டுவதற்கான அவர்களுடைய முயற்சியில் திறத்தவர்களினால் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்.*

*10. திறத்தவர்கள் தீர்வொன்றினை எட்டுவதற்கு இயலுமாகவுள்ளவிடத்து அத்தகைய தீர்வானது எழுத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், இவ்விதிகளுக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் ஆ இல் பொருளளவில் இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தீர்வுக்கான எண்பிப்பாக பிணக்கிற்கான இரண்டு திறத்தவர்களினாலும் மற்றும் மதிப்பீட்டாளரினாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.*

*11. அச்சந்திப்புத் திகதியிலிருந்து பத்து (10) நாட்களுக்குள் இரண்டு திறத்தவர்களினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வினை எட்டுவதற்கு பிணக்கிற்கான திறத்தவர்கள் தவறுகின்றவிடத்து, அவர்கள் பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் இ இலுள்ள ஆவணமொன்றில் அப்பயன்படக் கையொப்பமிடுதல் வேண்டும்; அது மதிப்பீட்டாளரினால் புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும்.*

*பாகம் II*

*12. விதி 6 இன் அல்லது விதி 11 இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டவாறு பகுதி I இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு பிணக்குக்கான திறத்தவர்கள் அவ்விரண்டு திறத்தவர்களுக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உடன்பாட்டை எட்டத் தவறுகினறவிடத்து, விடயத்திற்கேற்ப, பிணக்குக்கான திறத்தவர்களில் ஒருவர் பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் ஈ இல் எழுத்துமூலம் அத்தகைய தவறுகை பற்றி ஆணைக்குழுவுக்கு அறிவிக்கலாம் என்பதுடன், அதனைத் தீர்த்துவைக்குமாறு ஆணைக்குழுவுக்கு அழைப்பு விடுத்தலும் வேண்டும்.*

*13. விதி 2 (1) இன் (அ) என்னும் வகுதியின் கீழ் பிணக்கொன்று ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படப்படுமிடத்து, அத்தகைய ஆற்றுப்படுத்தல் செய்யப்பட்டதிலிருந்து ஐந்து வேலை நாட்களினுள் மூன்று (3) ஆட்களைக் கொண்ட மத்தியஸ்தர் குழாமொன்றை நியமித்தல் வேண்டும். அவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் அல்லது ஆணைக்குழுவின் பதவியணியினது உறுப்பினராகவும் இருப்பதுடன் இவரே குழாத்தின் தவிசாளராகவும் மற்றும் ஏனைய இருவரும் (2) ஓய்வுபெற்ற பகிரங்க அலுவலர்களுக்கிடையிலிருந்து நியமிக்கப்படுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

*14. விதி 12 இன் கீழ் ஆணைக்குழுவிற்கு குறிப்பீடு செய்யப்படும் விதி 2 (1) இன் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்பவற்றின் வகுதியின் கீழ் பிணக்கொன்று வருகின்றவிடத்து, ஆணைக்குழு மத்தியஸ்தத்தின் ஊடாக தவிர்ந்த ஒன்றிலும் நீதிமன்றத்தினால் அல்லது நடுத்தீர்ப்பாளரூடாக தீர்மானிக்கப்படவேண்டிய பிணக்கு கூடுதலான தோதாகவிருந்தாயினும் சரி தீர்மானிக்கும் பொருட்டு ஆணைக்குழுவானது முன் மத்தியஸ்த மதிப்பீடொன்றினை அத்தகைய ஆற்றுப்படுத்தலின் ஐந்து (5) வேலை நாட்களுக்குள் நடாத்துதல் வேண்டும்.*

*(அ) ஆணைக்குழு ஒன்றில் நீதிமன்றங்களினால் அல்லது நடுத்தீர்ப்பாளரினால் தீர்மானிக்கப்படவேண்டிய பிணக்கிற்காக மிகவும் தோதானதென தீர்மானிப்பின், அது அத்தகைய ஆற்றுப்படுத்துகையின் பத்து (10) வேலைநாட்களினுள் பிணக்கிற்கான திறத்தவர்களுக்கு அத்தகைய முடிபை அறிவித்தல் வேண்டும் ; அல்லது*

(ஆ) ஆணைக்குழு வேறுவகையில் தீர்மானிக்குமாயின், அது விதி 12 இன் கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய ஆற்றுப்படுத்தலின் பத்து (10) வேலை நாட்களுக்குள், மத்தியஸ்தர்கள் குழாமொன்றினை நியமித்தல் வேண்டும். மூன்று நபர்கள் உள்ளடங்குதல் வேண்டும். இவர்களில் ஒருவர் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக அல்லது ஆணைக்குழுவின் பதவியணியினது உறுப்பினர் ஒருவராக அல்லது பகிரங்க அலுவலர் ஒருவராக இருக்க வேண்டும். இவர் அந்த மத்தியஸ்தர் குழுவின் தலைவராக இருக்க வேண்டும். அத்தகைய பிணக்கு சம்பந்தப்படுகின்ற விடயத்தில் அனுபவம் வாய்ந்த ஓய்வுபெற்ற பகிரங்க அலுவலருக்கு இடையில் இருந்து ஏனைய இரண்டு (02) உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுதல் வேண்டும்.

15. விதி 13 அல்லது 14 இன் நோக்கத்திற்காக மத்தியஸ்தர்களை நியமிக்கும் போது, ஆணைக்குழு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியமிக்கப்படுபவர்களின் தகைமைகளையும் அனுபவத்தையும் கருத்திற்கொண்டு நியமித்தல் வேண்டும்.

16. மத்தியஸ்தர்கள் குழாம் (இவ்விதிகளின் கீழ் நியமிக்கப்பட்ட) தன்முன்னிலையிலுள்ள ஒரு பிணக்கைத் தீர்த்து வைப்பதை வசதிப்படுத்தலில் கீழே தரப்பட்டுள்ள செயல்முறையையும் நடவடிக்கைமுறையையும் பின்பற்றுதல் வேண்டும் :-

(அ) இவ்விதிகளின் கீழ் மத்தியஸ்தர்கள் குழாமின் நியமனத் திகதியிலிருந்து ஐந்து (5) வேலை நாட்களினுள், பிணக்கினைத் தீர்த்துவைக்கும் நோக்கத்திற்கான சமுகமளிப்பது அவசியம் எனக் கருதப்படும் அந்தப் பிணக்கிற்கான திறத்தவர்கள் மற்றும் அத்தகைய வேறு திறத்தவர்களுக்கும் ஒரு மத்தியஸ்த சந்திப்பிற்கு சமுகமளிக்கும்படி எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும். அந்த அறிவித்தலில் கூட்டாக அல்லது தனியாக, இடம் மற்றும் நேரம் என்பவை குறித்துரைக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) திறத்தவர்களினால் பிணக்குக்கு நட்புறவு ரீதியான இணக்கத்தினை வசதிப்படுத்தும் பொருட்டு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினாலான மத்தியஸ்த மாநாடுகளைக் கூட்டுதல் வேண்டும் ;

(இ) மத்தியஸ்த மாநாடுகளை நடத்தும் போது வெளியிடப்படும் அல்லது கலந்துரையாடப்படும் திறத்தவர்களினாலும் மற்றும் தரப்புகளினால் சமர்ப்பிக்கப்படும் சகல ஆவணங்களினதும் வேறு எவையேனும் கருமங்களினாலும் கூட்டுதல் வேண்டும் ;

(ஈ) இரண்டு திறத்தவர்களுக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நட்புறவு ரீதியான ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு பிணக்குக்கான திறத்தவர்களுக்கு காரணமானவற்றினை தோதான முறையில் செவிசாய்த்தல் தொடர்பாடல், மத்தியஸ்தத் திறன்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதன்மூலம் முயற்சி எடுத்தல்

(உ) மத்தியஸ்த செயல்முறை முழுவதிலும் சுயாதீனத்தன்மையையும், நடுநிலைத் தன்மையையும் பாரபட்சமின்மையையும் பேணி நடத்தல் வேண்டும் ;

(ஊ) மத்தியஸ்தர் குழாம் நியமிக்கப்படும் போது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் தனது கலந்துரையாடலை முடிவு செய்தல் வேண்டும் ;

(எ) அதனது கலந்துரையாடலின் முடிவில் :-

(i) திறத்தவர்களுக்கிடையில் ஒரு உடன்பாடு எட்டப்படுமாயின், அத்தகைய உடன்பாடு (அட்டவணையின் உ எனும் படிவத்தில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்க) எழுத்தில் மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் இரு திறத்தவர்களும் அத்தகைய உடன்பாட்டின் நிபந்தனைகளுக்கு தாம் உடன்படுவதைக் குறிப்பிடுகின்ற ஆவணத்தில் தமது கையொப்பங்களை இடுதல் வேண்டும். அத்துடன் மத்தியஸ்தர்களின் குழாம் இவ்விதிகளின் கீழ் பிணக்கு தீர்க்கப்பட்டுள்ளது என்பதை சான்றுப்படுத்தி தமது கையொப்பங்களை இடுதல் வேண்டும் ; அல்லது

(ii) திறத்தவர்களுக்கிடையில் உடன்பாடு எட்ட முடியாதுவிடின், (அட்டவணையின் ஊ என்னும் படிவத்தில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம்) அந்த பிணக்கினை மத்தியஸ்தம் மூலம் தீர்த்துவைக்கப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது, ஆனால் தோல்வியுற்றது என சான்றுப்படுத்தி "தீர்க்காமை பற்றிய சான்றிதழ்" ஒன்றை ஆணைக்குழு வழங்க வேண்டும்.

17. ஒரு பிணக்கினை மத்தியஸ்தம் செய்தல் மற்றும் தீர்த்து வைத்தல் தொடர்பில் அந்த மத்தியஸ்தர் குழாமில் எல்லாக் கலந்துரையாடல்களின் முடிவின் இறுதியிலும், ஆணைக்குழு அதற்கு உறப்பட்ட செலவுகள் அல்லது செலவினங்கள் தொடர்பில் இரண்டில் ஒரு திறத்தவரிடமிருந்து ஒரு தொகையினை அறவிடலாம். ஒவ்வொரு திறத்தவரிடமிருந்தும் அறவிடப்பட வேண்டிய தொகையும் மற்றும் அறவிடப்பட வேண்டிய விகிதாசாரமும் திறத்தவர்களின் நடத்தையையும் வழிமுறைகளையும் மற்றும் ஏனைய இயைபான சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்ட பின்னர் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அறவிடப்படவேண்டிய தொகையைத் தீர்மானிப்பதில் பின்வரும் கட்டளைக்கற்கள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(அ) விதி 2 (1) இன் (அ) என்னும் வகுதியின் கீழ்வருகின்ற பிணக்குள் - பிணக்குக்கான திறத்தவர்களிடமிருந்து எந்தவிதமான செலவுகளோ அல்லது செலவினங்களோ அறவிடப்படுதல் கூடாது ;

(ஆ) விதி 2 (1) இன் (ஆ) மற்றும் (இ) என்பவற்றின் கீழ்வருகின்ற பிணக்குகள்– பிணக்குக்கான திறத்தவர்கள் அந்தப் பிணக்கு தொடர்பில் முதலாவது மத்தியஸ்த சந்திப்பின் இறுதியில் நட்புறவு ரீதியான ஒரு உடன்பாட்டை எட்டியிருப்பின், செலவுகளோ அல்லது செலவினங்களோ அறவிடப்படக்கூடாது. ஆணைக்குழுவினால் உறப்பட்ட செலவுகள் அத்தகைய உடன்பாடு கூட்டப்படவில்லையெனின் உரிய திறத்தவர்களிடமிருந்து செலவுகள் அல்லது செலவினங்கள் சம விகிதங்களில் அறவிடப்படுதல் வேண்டும் ;

(இ) விதி 2 (1) இன் (ஈ) என்னும் வகுதியின் கீழ்வருகின்ற பிணக்குகள் – ஆணைக்குழுவினால் உறப்படும் செலவுகளும் செலவினங்களும் உரிய திறத்தவர்களிடமிருந்து சம விகிதத்தில் அறவிடப்படுதல் வேண்டும்.

18. இவ் ஒழுங்குவிதிகளின் கீழான பிணக்கு ஒன்றுக்கான திறத்தவர்களுக்கிடையிலான எல்லாத் தொடர்பாடல்களும் அந்தத் திறத்தவர் ஏதேனும் தொலைநகல் அல்லது இலத்திரனியல் மின்னஞ்சல் போன்ற ஏனைய பிற சேவை வசதிகளினூடாகப் பெற்றுக்கொள்ள உடன்பாட்டாலெழிய, எழுத்தில் விடுக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு பதிவுத் தபால் மூலம் தொடர்பாடல் செய்திகளைக் கிடைக்கச் செய்வதானது அத்தகைய தொடர்பாடல் செய்தி அஞ்சல் செய்யப்பட்ட திகதியின் உடனகத்துப் பின்னர் அந்த அஞ்சல் விநியோகத்தின் அடுத்த நான் அத்தகைய தொடர்பாடல் செய்திகள் ஏனைய தரப்பு மூலம் பெறப்பட்டுள்ளன எனக் கருதப்படுதலும் வேண்டும். உரிய திறத்தவர்கள் எவையேனும் ஏனைய சேவை வழிகளின் பேரில் அத்தகைய தொடர்பாடல் செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்கு உடன்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அத்தகைய செய்தியானது ஏனைய திறத்தவர்கள் மூலம் பெறப்பட்டது என்பதற்கான அறிவித்தல் கிடைப்பதன் பேரில் மாத்திரமே அந்தத் தொடர்பாடல் செய்திகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனக் கருதப்படுதல் வேண்டும்.

19. பதிவுத் தபால், தொலைநகல், இலத்திரனியல் மின்னஞ்சல் அல்லது ஆணைக்குழுவின் வேறு எவையேனும் வழிமுறைகளின் ஊடாக ஆக்கப்படக்கூடியவாறான குறிப்பீடுகள், தொடர்பாடல்கள், சமர்ப்பணங்கள் என்பவற்றை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கலாம். பதிவுத் தபால் தவிர்ந்த மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தொடர்பாடல் மாதிரினூடாக கிடைக்கச் செய்யப்படும் அந்த குறிப்புகள், தொடர்பாடல் செய்திகள் மற்றும் சமர்ப்பணம் என்பன ஆணைக்குழுவினால் அத்தகையவை கிடைக்கப்பெற்றன என்பதற்கான அறிவித்தல் விடுக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளன எனக் கருதப்படுதல் வேண்டும்.

20. இவ்வதிகளின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது இவ்விதிகளின் ஏதேனும் ஒன்றின் கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டை மீறுகின்றவரான ஆள் சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

21. வேறு வகையில் சந்தர்ப்பம் தேவைப்படுத்தினாலன்றி, இவ் விதிகளில் –

"சட்டம்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம் எனப் பொருள்படும் ;

"ஆணைக்குழு" என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு எனப் பொருள்படும் ;

"பிணக்கு" என்பது, சட்டத்தின் 39 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான மின்சார விநியோகம் அல்லது மின்சாரப் பாவனை தொடர்பில், உரிமம் பெற்றவருக்கும் கட்டணம் செலுத்தும் ஒரு நுகர்பவருக்கும், அல்லது உரிமம் பெற்றவருக்கும் உரிமம் பெற்ற மற்றுமொருவருக்கும், அல்லது உரிமம்பெற்ற ஒருவருக்கும் பாதிக்கப்பட்ட எவரேனும் ஒரு பிறதரப்புக்கும் இடையில் எழுகின்ற ஒரு இணக்கப்பாடின்மை எனப் பொருள்படும் ;

"மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம்பெற்றவர்" என்பது, மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் வழங்கப்பட்டுள்ளவரான ஆளொருவர் எனப் பொருள்படும் ;

"உரிமம் பெற்றவர்" என்பது, சட்டத்தின் கீழ் மின்சாரப் பிறப்பாக்கம், மின்சாரக் கடத்துகை அல்லது மின்சாரப் பகிர்ந்தளிப்பு என்பவற்றுக்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளவரான ஆள் எனப் பொருள்படும் ;

"கட்டணம் செலுத்தும் நுகர்பவர்" என்பது, சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம் பெற்றவரிடம் இருந்து மின்சார விநியோகமொன்றினை தேவைப்படுத்துகின்றவரும் மற்றும் அந்த மின்சாரப் பகிர்ந்தளிப்பு உரிமம்பெற்ற ஆளினால் அவ்வாறு மின்சாரம் விநியோகிக்கப்பட்டவருமான ஒரு ஆள் எனப் பொருள்படும் ;

[விதி 3 மற்றும் விதி 7]

அட்டவணை

**படிவம் அ**

[வரி செலுத்தும் ஒரு வாடிக்கையாளர் அல்லது பாதிக்கப்பட்ட வேறு திறத்தவரின் அல்லது உரிமம் பெற்றவரின் தபால் முகவரி - 1]

[தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் ]

[மின்சாரக் கணக்கு இலக்கம் (ஒரு வரி செலுத்தும் வாடிக்கையாளராயின் ) அல்லது திறத்தவர்களுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் தொடர்பு குறி இலக்கம் ] (ஏதேனும் இருப்பின்)

[உரிய இயைபான அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொடர்பு குறி இலக்கம் (ஒரு கட்டணம் செலுத்தும் நுகர்பவராயின் அல்லது ஏனைய பாதிக்கப்பட்ட திறத்தவராயின்)]

[திகதி ]

[பிரதிப் பொது முகாமையாளர் (இ. மி. சபையாயின்)]

மின்சாரப் பகிர்ந்தளிப்பு மாகாணத்தின் பெயர் :

அல்லது

[தொழிற்பாடுகளுக்கு பொறுப்பான தலைவர் (லெகொ L ECO வாக உள்ள சந்தர்ப்பத்தில்)]

அல்லது

[பிரதிப் பொது முகாமையாளர், மின்சார கடத்துகை]

[பிரதிப் பொது முகாமையாளர், மின்சார பிறப்பாக்கம்]

அல்லது

உரிமம்பெற்றவர் - 2

[தபால் முகவரி]

**பிணக்குக்கான திறத்தவர்களினால் பிணக்கைத் தீர்ப்பதற்கான வேண்டுகோள்**

இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட மின்சார (பிணக்கினை தீர்த்தல்) விதிகளின் பாகம் I இன் பிரகாரம், நான் கீழே தரப்பட்டுள்ள பிணக்கைத் தீர்த்துக்கொள்வதற்கு உங்களுடைய தலையீட்டை இத்தால் கோருகின்றேன்.

(அ) பிணக்கிலுள்ள கருமம் பற்றிய விளக்கம் :

(ஆ) பிணக்குடன் சம்பந்தப்படுகின்றவரான உரிய அலுவலரின் அல்லது வேறு எவரேனும் அலுவலரின் விபரங்கள் (உரிமம்பெற்ற தரப்பு 1 அல்லது உரிமம் பெற்ற தரப்பு 2 தொடர்பில் ஏற்புடையதல்ல) ;

(இ) பிணக்குக்கான இயைபான நிகழ்வுகள் (மேலேயுள்ள (அ) என்பதன் கீழ் தரப்பட்டுள்ள விளக்கத்திற்கு மேலதிகமானது) :

(ஈ) தீர்வுக்கான முன்மொழிவு :

(உ) மதிப்பீட்டாளாகத் தெரிவு செய்யப்படவேண்டிய உத்தேசிக்கப்பட்ட மூன்று பெயர்கள் (உரிமம் பெற்றவருக்கு 1 ஏற்புடைமை அல்லது உரிமம் பெற்றவர் 2 தொடர்பில் மாத்திரம் ஏற்புடையது).

1. ..................................................

2. ..................................................

3. ..................................................

மேலே குறிப்பிடப்பட்ட நியதிகளின் பிரகாரம் இது தொடர்பாக ஏற்பாடு செய்யப்படும் சந்திப்பு பற்றி, மேலே தரப்பட்ட தொடர்புகொள்ள வேண்டிய விபரங்களின் ஊடாக தயவு செய்து எனக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

....................................................

[பிணக்கிலுள்ள தரப்பின் பெயர் ]

[விதி 5 மற்றும் விதி 10 ]

**படிவம் ஆ**

புரிந்துணர்வு உடன்படிக்கை

உடன்படிக்கையானது ...................................................... (வரி செலுத்தும் வாடிக்கையாளர், பாதிக்கப்பட்ட திறத்தவர் அல்லது உரிமம் பெற்றவரின் - 1 இன் முழுப்பெயர்) என்பவருக்கும் ................................................ (இயைபான அலுவலர் அல்லது மின்சார உரிமம் பெற்றவர் - 2) என்பவருக்குமிடையில் .......................................... ஆம் திகதி ......................................... என்ற இடத்தில் செய்து கொள்ளப்படுகின்றது.

உடன்படிக்கையின் நியதிகள் :

1. .......................
2. .......................
3........................
4. .........................
5. ...........................

.......................................
[கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளர், பாதிக்கப்பட்ட திறத்தவரின் அல்லது உரிமம் பெற்றவரின் தரப்பு - 1இன் பிரதிநிதியினது கையொப்பம் ]

பெயர் :
ஒழுங்கமைப்பு : (ஏற்புடையதாயின்)
தே. அ. அ. இ.

.......................................
சாட்சி 1

பெயர் :
தே. அ. அ. இ.

.......................................
[இயைபான அலுவலரின் அல்லது உரிமம் பெற்றவரின் தரப்பு 2 இன் பிரதிநிதியினது கையொப்பம்]

பெயர் :
பதவிப் பெயர் :

.......................................
சாட்சி 1

பெயர் :
தே. அ. அ. இ.

..................................................................
பிணக்கைத் தீர்க்கும் அலுவலரின்/மதிப்பீட்டாளரின் கையொப்பம்
பெயர் :
பதவிப் பெயர் :

இடம் :
திகதி :

[விதி 6 மற்றும் விதி 11 ]

### படிவம் இ

### தீர்க்கப்படாமை பற்றிய சான்றிதழ்

விடயத்திற்கேற்ப கீழே கையொப்பம் இட்டுள்ள "பிணக்கினைத் தீர்க்கும் அலுவலர்" அல்லது "மதிப்பீட்டாளர்" என்ற ரீதியில் கீழே குறித்துரைக்கப்பட்டுள்ள திறத்தவர்களுக்கிடையிலான பிணக்கு, கொடுத்துத் தீர்த்தலுக்காக எனக்குக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனவும், 2009 இன் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் மின்சார (பிணக்குகள் தீர்த்தல் பற்றிய நடவடிக்கை முறை) விதிகளின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய பிணக்கு தொடர்பில் கொடுத்துத் தீர்த்தலானது தொடர்பில் இணக்கப்பாடு சாத்தியமாக அமையவில்லை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பிணக்குக்கான திறத்தவர்கள் :

1. (பணிக்கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளரின் முழுப்பெயர்):
2. இயைபான அலுவலரின் பெயர் மற்றும் பதவிப் பெயர்) :

அல்லது

1. உரிமமம் பெற்றவர் – 1
2. உரிமம் பெற்றவர் – 2 (ஏற்புடையவாறு)

பிணக்கிலுள்ள விடயம் : (சுருக்கமாக) :
தொடர்புகுறி இலக்கம் :
ஆற்றுப்படுத்தும் திகதி :
மாநாடுகளின் திகதி/திகதிகள் :
கொடுத்துத் தீர்க்காமைக்கான காரணங்கள் :

......................................................................................

பிணக்கைத் தீர்க்கும் அலுவலர்/மதிப்பீட்டாளர்

பெயர் திகதி :
பதவிப் பெயர் :

[விதி 12 ]

### படிவம் ஈ

[பிணக்கிலுள்ள திறத்தவரின் பெயர் - 1 ]

[பதவிப் பெயர் ]

[தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம் ]

[முறைப்பாட்டு/பிணக்கு தொடர்புகுறி இலக்கம் ]

[திகதி]

பணிப்பாளர் தலைமையதிபதி,
இலங்கைப் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு.

### இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு ஒரு பிணக்கினை ஆற்றுப்படுத்துதல்

மின்சார (பிணக்கைத் தீர்த்தல் பற்றியநடவடிக்கை முறை) விதிகளின் நியதிகளின் பிரகாரம் .......................... (பிணக்கிலுள்ள திறத்தவரின்

*1 இன் பெயர் மற்றும் பதவிப்பெயர்) ஆகிய நான் ..............................எனும் பிணக்கொன்றினை சொல்லப்பட்ட ஆணைக் குழுவினால் தீர்க்கப்பட வேண்டிய இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு இத்தால் ஆற்றுப்படுத்துகின்றேன். பிணக்கைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு (நடத்தப்பட்ட சந்திப்புகளின் கூட்டக் குறிப்புகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன) திறத்தவர்களினால் இயன்றளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அந்தத் தரப்புகளினால் ஒரு உடன்பாட்டிற்கு வரமுடியவில்லை என்பதையும் குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன்.*

***பிணக்கின் வகுதி :***

☐ *இலங்கை மின்சாரச் சட்டத்திற்கான பிரிவுகள் 25 – 30 அல்லது அட்டவணை I, II அல்லது III ஆகியவற்றின் கீழ் எழுகின்ற பணிக்கட்டணம் செலுத்தும் ஒரு வாடிக்கையாளருக்கும் ஒரு உரிமம் பெற்றவருக்கும் இடையில் எழுகின்ற பிணக்கு.*

☐ *உரிமம் பெற்றவர் எதிர் கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளர் (மேலேயுள்ளவை தவிர்ந்த)*

☐ *உரிமம் பெற்றவர் எதிர்பாதிக்கப்பட்ட வேறு எவரேனும் திறத்தவர்*

☐ *உரிமம் பெற்றவர் எதிர் வேறு உரிமம் பெற்றவர்*

***பிணக்கிலுள்ள திறத்தவரின் விபரங்கள் :***

*பெயர் :*

*பதவிப் பெயர் :*

*தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் :*

***பிணக்குக்கான வேறு திறத்தவரின் விபரங்கள் :***

*பெயர் :*

*பதவிப் பெயர் :*

*தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் :*

*மின்சாரக் கணக்கு இலக்கம் (ஒரு பணிக்கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளர் எனும் சந்தர்ப்பத்தில்) திறத்தர்களுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் தொடர்பு குறி இலக்கம் (ஏதேனுமிருப்பின்)*

*பிணக்கிலுள்ள கருமம் :*

***பிணக்கத்தைத் தீர்த்துக் கொள்வது தொடர்பில் பிணக்கிலுள்ள திறத்தவர் – 2 இனால் ஆக்கப்பட்ட முன்மொழிவு***

***மேலேயுள்ள முன்மொழிவுகள் தொடர்பில் பிணக்கிலுள்ள திறத்தவர் – 1 இன் பதில் (கள்) (அந்தப் பிணக்கு விடயத்திற்கு உடன்படாமைக்கான காரணங்கள் அடங்கலாக):***

*பிணக்கினைத் தீர்த்துக் கொள்வதற்கான முன்மொழிவுகள்)*

.........................................................
[*பிணக்கிலுள்ள திறத்தவர் 1 இனது பெயர் மற்றும் கையொப்பம்*]

***இணைப்புகள் – செவ்வைபார்த்தல் பட்டியல் :***

☐ *ஒரு பிணக்கத்தைத் தீர்த்து வைக்குமாறு பணிக்கட்டணம் செலுத்தும் வாடிக்கையாளரிடமிருந்து /இன்னுமொரு உரிமம் பெற்றவரிடமிருந்து/பாதிக்கப்பட்ட ஏனைய திறத்தவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற எழுத்திலான வேண்டுகோள்.*

☐ *பரஸ்பர ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடிய கொடுத்துத் தீர்த்தலினை (இரு தரப்புகளினால் கையொப்பமிடப்பட்ட) எட்டுவதற்கு முயற்சிக்கும் பொருட்டு நடத்தப்பட்ட கூட்டங்களின் கூட்டக் குறிப்புகள்.*

☐ *திறத்தவர்களினால் செய்து கொள்ளப்பட்டிருந்த எழுத்திலான எவையேனும் ஒப்பந்தம் (ங்களின்) பிரதிகள்.*

[*விதி 16 (எ)*(i)]

**படிவம் உ**

**தீர்வை உடன்படிக்கை**

*இ. பொ. ப. ஆ. தொடர்புகுறி இலக்கம் :* ..................................
*தொடர்புகுறி செய்யப்பட்ட திகதி :* ...............................

*இவ்வுடன்படிக்கையானது ................................ (பிணக்கிலுள்ள திறத்தவர் 1 இன் முழுப்பெயர்) மற்றும் ................ (பிணக்கிலுள்ள திறத்தவர் – 2 இன் முழுப் பெயர்) என்போருக்குமிடையில் ............................ ஆந் திகதி ....................... இலங்கைப் பொது பயன்பாடுகள்ஆணைக்குழுவின் அலுவலகத்தில் செய்து கொள்ளப்படுகின்றது.*

*உடன்படிக்கையின் நியதிகள் :*

1. ..........................................................
2. ..........................................................
3. ..........................................................
4. ..........................................................
5. ..........................................................

..........................................................................
*பிணக்கிலுள்ள திறத்தவர் – 1 இன் கையொப்பம்*

*பெயர் :*
*ஒழுங்கமைப்பு : (ஏற்புடையதாயின்)*
*தே. அ. அ. இ.:*

..........................................................................
*பிணக்கிலுள்ள திறத்தவர் – 2 இன் கையொப்பம்*

*பெயர் :*
*பதவி :*

*மேலேயுள்ள திறத்தவர்களுக்கு இடையில் நிலவிய பிணக்கு (தொடர்புகுறி இலக்கம் ...............................) மின்சார (பிணக்குகள் தீர்த்தல்) விதிகளின் நியதிகளின் பிரகாரம் மத்தியஸ்தத்தின் மூலம் தீர்க்கப்பட்டது என்பதை நாம் இத்தால் சான்றுப்படுத்துகின்றோம்.*

.............................
*மத்தியஸ்தர் குழாமின் தலைவர்*

*பெயர் :*

*திகதி :*

...........................................
*மத்தியஸ்தர் குழாமின் உறுப்பினர்*

*பெயர் :*

...................................
*மத்தியஸ்தர் குழாமின் உறுப்பினர்*

*பெயர் :*

[*விதி 16 (எ)*(ii)]

**படிவம் ஊ**

**தீர்க்காமை பற்றிய சான்றிதழ்**

*கீழே குறித்துரைக்கப்பட்ட திறத்தவர்களுக்கிடையிலான பிணக்கு, உடன்பாடு எட்டப்படும் முகமாக இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது எனவும், 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் (பிணக்குகள் தீர்த்தல் பற்றிய நடவடிக்கை முறை) விதிகளின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய பிணக்கு தொடர்பில் இணக்கப்பாடு சாத்தியமாக அமையவில்லை எனவும் ஆணைக்குழுவின் மத்தியஸ்தர் குழுவினது தவிசாளராகிய நான் இத்தால் வெளிப்படுத்தி சான்றுப்படுத்துகின்றேன்.*

*பிணக்குக்கான திறத்தவர்கள்:*

1. *(பிணக்கிலுள்ளவரின் தரப்பு – 1 இன் முழுப் பெயர்) :*
2. *(பிணக்கிலுள்ளவரின் தரப்பு 2 இன் முழுப் பெயர்) :*

*பிணக்கிலுள்ள விடயம் (சுருக்கமாக) :*

இ. போ. ப. ஆ. தொடர்புகுறி இலக்கம் :

இ. பொ. ப. ஆ. குழுவுக்கு ஆற்றுப்படுத்தும் திகதி : .................................

மத்தியஸ்தம் தொடர்பான மாநாடுகளின் திகதி(கள்) :

கொடுத்துத் தீர்க்காமைக்கான காரணங்கள் :

...................................
மத்தியஸ்தர் குழாமின் தவிசாளர்

பெயர் : திகதி :

மேலேயுள்ள வெளிப்படுத்துகையானது இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினது அபிப்பிராயமாகக் கருதப்படலாம் என நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

.......................................
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர்

பெயர் : திகதி :

*2-185*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.